

திருச்சி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் 50A வட்டக் கழக செயலாளர் ஞானசேகர் ஏற்பாட்டில் மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் அ.ம.மு.க. வட்டச் செயலாளர் பிரான்சிஸ் ராஜா பாலக்கரை பகுதி பிரதிநிதி மாமன்ற உறுப்பினர் தேர்தலில் போட்டியிட்டவர் கவிதா மேரி வட்ட அவைத்தலைவர் அழகு ஐயப்பன், பாலக்கரை இளைஞர் அணி பிரதிநிதி ஆரோக்கியராஜ் மற்றும் பத்திற்கு மேற்பட்டோர் தி.மு.க. அலுவலகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் மாநகர கழகச் செயலாளர் மு.மதிவாணன் பகுதிகளாக செயலாளர் ராஜ் முஹம்மது ஆகியோர் உடன் உள்ளனர்.

# பென்னாகரத்தில் 77வது குடியரசு தின விழா!

## ஆசி.தனபாலன் – முன்னணியினர் பங்கேற்பு!



தருமபுரி, ஜன. 29 -

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் சட்டமன்ற தொகுதியில், ஏரியூர் ஒன்றியம் , பத்ரஅள்ளி ஊராட்சி ,பூச்சூர் சமுதாய கூடத்தில், நமது நாட்டின் 77 வது குடியரசு தின விழாவை முன்னிட்டு கிராம சபை கூடம் நடைபெற்றது.இந்த விழாவில் சிறப்பு அழைபளராக தருமபுரி மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர் மாவட்டக் கழக பிரதிநிதி சமுக ஆர்வலர் ஆரல்குந்தி ஆசி தனபாலன் பென்னாகரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் தருமபுரி மாவட்டக் கழக செயலாளரும், கழக மாநில விவசா யத் தொழிலாளர் அணி துணை தலைவருமான பி.என்.பி. இன்பசேகரன் அறிவுரைப்படி விழாவில் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார் .

மேலும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அனைவர்க்கும் அனைத்தும் கிடைக்கும் வகையில் நல்லாட்சி நடத்தி வரும் நாயகர் முதலமைச்சர் தளபதியார் அவர்கள் நாள் தோறும் பொதுமக்களுக்கு வாரி வழங்கும் நலத் திட்டங்க ளையும், கலைஞர் கனவு இல்லம்,குடிநீர்,

தெரு விளக்கு பராமரிப்பு முதலமைச்சரின் கிராம சாலை திட்டம், வீட்டுவரி, வீட்டு மனைப் பட்டா வழங்குதல், மயான மேடை பராமரிப்பு , ஆழ்துளை கிணறு பராமரிப்பு மற்றும் ஊராட்சில் துமையை பேணி காக்கவும் ஆ.சி தனபாலன் பொதுமக்களிடம் எடுத்துக்கூறினர்.

மேலும் இந்த விழாவில் தனி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர் (கி ஊ) ஏரியூர் ஒன்றியம்,பத்ர அள்ளி ஊராட்சி.,

ஏரியூர் காவல் ஆய்வாளர் சுரேஷ், கிராமநிர்வாக அலுவலர் பூவரசு, பத்ர அள்ளி ஊராட்சி செயலாளர் எ.மாணிக்கம், மக்கள் நலப்பணியாளர் மயில் வேல், பற்றாளர் வினோத் குமார் KK 278 தொடக்க வேளாண்மை - கூட்டுறவு கடன் சங்க பொது விநியோக திட்ட விற்பனையாளர் பேபி தூய்மைப் பணியாளர்கள், பணி தள பொறுப்பாளர்கள், கழக உடன் பிறப்புகள், பொது மக்கள் உள்ளிட்ட பெருந்திரளானோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 605/MDS, பேரவை இணைப்பு எண். 287)பணிமனை நிர்வாகிகள் தேர்தல் 31.01.2026 அன்று நடைபெறுவதாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. ஏற்கெனவே நடைபெற்று வருகின்ற சமரசப் பேச்சுவார்த்தை தொடர்வதால், ஆணையாளர் வழக்கறிஞர் திரு. அ.சரவணன் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தேர்தல் நடைபெறும் நாள் ஒத்தி வைக்கப்படுகிறது.

சமரசத் தீர்வு எட்டவில்லை யென்றால் 15.02.2026 அன்று அச்சங்கத்தின் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **கலைஞரகம்** | **மு.சண்முகம் Ex.MP** |
| சென்னை - 17 | பொதுச் செயலாளர் |
| நாள்- 27.01.2026 | தொ.மு.ச. பேரவை |



திருவாரூரில் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் முன்னாள் எம்.பி., மைத்ரேயன் சிறப்புரையாற்றினார். மாணவரணி மாநில துணை செயலாளர் மன்னை.த. சோழராஜன், மாவட்ட அமைப்பாளர் பகலவன், அவைத்தலைவர் தன்ராஜ், நகர செயலாளர் வாரை. பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், தொகுதி பார்வையாளர்கள் எஸ்.கே.வேத ரத்தினம், ஜெகவீரபாண்டியன், சுப்புரத்தினம், இளம்பேச்சாளர் தினேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### புதுக்கோட்டை மாவட்டம்

# முதலமைச்சர் இளைஞர் விளையாட்டுத் திருவிழா!

## அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்!

புதுக்கோட்டை. ஜன 29 -

புதுக்கோட்டை முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டரங்கில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (புதுக்கோட்டை பிரிவு) சார்பில், முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா "இது நம்ம ஆட்டம் 2026" போட்டிகளை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் 25.01.2026 அன்று கொடியசைத்து துவக்கி வைத்து, வெற்றிபெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

பின்னர், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

முதலமைச்சர் அவர்கள் இளைய தலைமுறையினரின் சமூக முன்னேற்றம், உடற்கல்வி, விளையாட்டு, சமூக இணைப்பு மற்றும் உடல், மன ஆரோக்கியத்தை வலுப்படுத்தும் நோக்கில் 25.01.2026 முதல் 08.02.2026 வரை தமிழ்நாடு முழுவதும் ஊராட்சி ஒன்றிய அளவில், மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில், முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா "இது நம்ம ஆட்டம் 2026" போட்டிகள் நடத்திட தெரிவித்துள்ளார்கள். அதன்படி, புதுக்கோட்டை முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டரங்கில், முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா "இது நம்ம ஆட்டம் 2026" போட்டிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களில் முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா "இது நம்ம ஆட்டம் 2026" போட்டிகளில் ஒன்றிய அளவிலான போட்டிகள் அந்த அந்த ஊராட்சி ஒன்றியங்களில் 25.01.2026 மற்றும் 27.01.2026 வரை நடத்தப்படவுள்ளது. மாவட்ட அளவிலான போட்டிகள் புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் 30.01.2026 முதல் 31.01.2026 வரை நடத்தப்படவுள்ளது. மாநில அளவிலான போட்டிகள் 06.1.2026 முதல் 08.01.2026 வரை நடைபெறவுள்ளது. இப்போட்டியில், வாலிபால், ஸ்ட்ரீட் கிரிக்கெட், கபாடி, எறி பந்தாட்டம், கயிறு இழுத்தல், தடகளம், கேரம், குண்டெறிதல், உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடைபெற உள்ளது.

எனவே, இப்போட்டிகளில் கலந்துகொள்ளும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் சிறந்த முறையில் விளையாடி வெற்றி பெற்று, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு பெருமை சேர்த்திட வேண்டும் எனவும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்வில், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு. வை.முத்துராஜா, மாநகராட்சி துணை மேயர் எம். லியாகத் அலி, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் து.செந்தில்குமார், காவல் துணை கண்காணிப்பாளர் பிருந்தா, புதுக்கோட்டை வட்டாட்சியர் மு.செந்தில் நாயகி, மண்டல துணை வட்டாட்சியர் ஆ.லட்சுமணன், மு.க.ராமகிருஷ்ணன், வெற்றிச்செல்வன், ஞானசேகரன், எல்ஐசி ரமேஷ் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூரில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கண்ணன் தலைமையில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் யஷ்வினி மோகன் வரவேற்புரையாற்றினார். இந்த பொதுக்கூட்டத்தில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ் , தலைமை கழக பேச்சாளர் கருணாநிதி ஆகியோர் எழுச்சி உரையாற்றினார்கள். இந்த கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர்கள் மாரியப்பன்கென்னடி, லயோலாராஜசேகர், இளம் பேச்சாளர் பவன்யா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இந்தக் கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாநகர மேயர் சத்யா, மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன், மாவட்ட அவைத் தலைவர் யுவராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள், கழகத் தோழர்கள், பொதுமக்கள் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.



தருமபுரி கிழக்கு மாவட்ட கழக மாணவர் அணி சார்பில் கம்பைநல்லூர் பேருந்துநிலையத்தில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கநாள் பொதுக் கூட்டத்தில் தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி., தலைமைக் கழக பேச்சாளர்கள் வழக்கறிஞர் வி.வைத்தியலிங்கம், சஹா.விக்னேஷ், த.தங்கமுத்து ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். கூட்டத்தில் முன்னாள் மாவட்டச் செயலாளர்கள் பி.என்.பி.இன்பசேகரன், நகர செயலாளர்கள் முல்லை.ரவி,நாட்டான் மாது,எம்.பி.கௌதம், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் க.அன்பரசன், ஒன்றிய செயலாளர் ரத்தினவேல், சூர்யா தனபால், வடமலைமுருகன், கவிதா மோகன்தாஸ், மாணவர் அணி கௌதம்,அரவிந்த்,கிருஷ்ணமூர்த்தி, பிருந்தா, திருமலைவாசன், மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர் கழக, நிர்வாகிகள்,சார்பு அணி பொறுப்பாளர், கிளை கழகத்தினர், BLA2, BDA, BLC மற்றும் கழக முன்னோடிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



ஈரோடு வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகளுக்கு நடைபெற்ற வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் மாவட்ட கழக செயலாளர் நல்லசிவம் தலைமையில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் குரு முன்னிலையில் தி.மு.க. மாநில வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் சிறப்புரையாற்றினார். அருகில் சட்டமன்ற உறுப்பினர் அந்தியூர் வெங்கடாசலம், சிந்து ரவிச்சந்திரன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் அந்தியூர் மகாலிங்கம், துணை அமைப்பாளர்கள் சுப்ரமணியன் குமார் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ஈரோடு வடக்கு மாவட்டத்தில் திராவிடப் பொங்கல் விழா மற்றும் சமூக நீதிக்கான திருவிழா ஈரோடு வடக்கு மாவட்ட கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை சார்பில் "சமத்துவம் பொங்கட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்" என்ற தலைப்பில் கோபியில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் பொங்கல் விழா நடைபெற்றது. விழாவில் மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.